**செய்தி வெளியீடு எண் : 604** **நாள்: 14.04.2022**

**செய்தி வெளியீடு**

பெரும் நிதிச் சுமைகளை உருவாக்கக்கூடிய வழக்குகள் குறித்து அரசுக்கு உதவுவதற்காக, வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழுவின் முதல் கூட்டம் தலைமைச் செயலகத்தில் 13.4.2022 அன்று நடைபெற்றது

2021–2022ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், அரசுக்கு அதிக நிதிச் சுமைகளை உருவாக்கக்கூடிய வழக்குகள் குறித்து வழிகாட்டுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவை அரசு அமைத்துள்ளது.

| தொடர் எண் | குழு உறுப்பினர்கள் |
|---|---|
| 1. | நீதிபதி கே.கண்ணன்(ஓய்வு)<br>பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மற்றும் இரயில்வே கோரிக்கைகள் தீர்ப்பாய முன்னாள் தலைவர் |
| 2. | வழக்குரைஞர் ஜோசப் பிரபாகர், மறைமுக வரிவிதிப்பு வல்லுநர் |
| 3. | வழக்குரைஞர் கே.ரவி, நேரடி வரி விதிப்பு வல்லுநர் |
| 4. | வழக்குரைஞர் வி.லஷ்மிநாராயணன், உரிமையியல் வழக்கு வல்லுநர் |
| 5. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, |
| 6. | அரசு செயலாளர், சட்ட விவகாரங்கள். |

மேற்சொன்ன குழுவின் ஏனைய பணிகளுடன், நீதிமன்ற வழக்குகளால் அரசிற்கு ஏற்படும் நிதிச் சுமைகளைக் குறைப்பதற்கான உத்திகளைத் தெரிவித்தல், நீதிமன்ற அமைப்புகளில் பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு அணுகுமுறைகள் மற்றும் வாதங்களைக் கருத்தில் கொண்டு ஆலோசனை

வழங்குதல், குறிப்பிட்ட வழக்கில் வெற்றி வாய்ப்புகளை மதிப்பீடு செய்து இணக்கமாக செல்லுதல் அல்லது வழக்கின் நிலைகளை மாற்றியமைத்தல் முதலியவற்றுக்கான வாய்ப்புகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல், அதிக நிதிச்சுமையை உருவாக்கக்கூடிய வழக்குகளில் நிதிச்சுமைகளைக் குறைக்கும் பொருட்டு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் தாமதத்திற்கான அபராத வட்டி போன்ற மிகை செலவுகளைத் தவிர்க்கும் வகையில் நீதிமன்ற ஆணைகளின் நிறைவேற்றத்தைக் கண்காணித்தல் ஆகிய பணிகளும் அடங்கும்.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தனது தொடக்கக் குறிப்பில் தற்போதைய சூழ்நிலையில் அதிக நிதிச்சுமையை உருவாக்கக்கூடிய வழக்குகள் அனைத்தையும் கூர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வலுவான தரவுகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in